Registered as a Newspaper

**Botany 87 (A/L)**
திரு. குகாதரன்
Sat. & Sundays
9 30-10 30
இனப்பெருக்கம்
2.30-3 30
பிறப்புரிமையியல்
**New Master Institute**
B M.C. Lane, JAFFNA.

# உதயன்

விலை ரூ.1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

**Zoology 87 A/L**
திரு. நாகநாதன்
மூளையியல்
Sat., Sun.: 8 30-9.30
Tues, Thu: 3,00-5.00
பாகுபாடு
Sat. & Sun: 10.30-11 30
Saturday: 6.30-8 30
**New Master**
INSTITUTE
B. M C. Lane,
JAFFNA.

மலர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ மார்கழி மீ 14 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 26 (29-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 28

# மட்டக்களப்பு அரச அதிபர் கடத்தப்பட்டார்

## விடுவிக்கப்பட்ட போது

## மயிர்க் கூச்செறியும் பயங்கரத்தில் இருந்து தெய்வாதீனமாகத் தப்பினார்

கொழும்பு, டிசம்பர் 29

**மட்டக்களப்பு மாவட்டத்தில் (பதில்) அரசாங்க அதிபர் திரு. மயில்வாகனம் செல்வரத்தினம் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார். பதினைந்து மணித்தியால விசாரணையின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.**

**விடுவிக்கப்பட்ட சமயம் மயிர்க் கூச்செறியும் விதத்தில் நடந்த பயங்கர சம்பவம் ஒன்றில் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். பயங்கர சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது.**

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

அரச அதிபர் திரு. செல்வரத்தினம் வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சனிக்கிழமை இரவு 9 மணி அளவில் கடத்திச் செல்லப்பட்டார்.

படுவான்கரைப் பகுதியில் அடையாளம் காணப்படாத இடம் ஒன்றில் அவர் தடுத்து வைக்கப்பட்டு துருவித் துருவி விசாரணை செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு விமான நிலையச் சுற்றுடலில் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படுவது சம்பந்தமாக திரு. செல்வரத்தினம் விசாரணை செய்யப்பட்டார் என்று தெரிகிறது.

கடத்திச்சென்றதாகக் கூறப்படும் நபர்கள் அரச அதிபரை வள்ளம் ஒன்றில் ஏற்றி மட்டக்களப்பு வாவி வழியே கொண்டு வந்தனர். அச்சமயம் மறுகரைப்பக்க வீதி வழியே ரோந்து சென்ற படையினரை வள்ளத்தில் வந்தவர்கள் கண்டுவிட்டனர்.

உடனே வள்ளத்தை மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே கொண்டு சென்றனர்: வள்ளத்தை எருமைத்தீவு கல்லடித் தெரு வேலாயுதசுவாமி ஆலயக்கரை அருகே நிறுத்திவிட்டு நபர்கள் தப்பி ஓடி விட்டனர்.

மறுகரை வீதிவழியாக வந்த ஆயுதப்படையினர், வாவியில் வந்து கொண்டிருந்த வள்ளம் திரும்பிச் சென்றதைக் கண்டதும் அந்த இடத்தில் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பின்னர் கரையில் இருந்த ஒரு மீனவரைப் பிடித்து இன்னொரு வள்ளத்தில் ஏற்றி மறுகரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறையில் ஷெல் தாக்குதல்கள்

வல்வெட்டித்துறை டிச 29

சனிக்கிழமை பகலிலும் சனிக்கிழமை பின்னிரவு நேரத்திலும் வல்வெட்டித்துறை முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஷெல் தாக்குதல்கள் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிய பகுதிகள் மீது விழுந்ததினால் உடல், உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை

எனினும்பல உடைமைகள் சேதமுற்றன.

வல்வைச்சிவன்கோயில் உரிமையாளர் வீட்டில் விழுந்த ஷெல்குண்டினால் வீட்டுக் கூரை பலத்த சேதமுற்றது.

இந்திரன்என்பவர் வீட்டுக்கிணற்றடியில்விழுந்த ஷெல் குண்டில் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் உட்பட பல பொருட்கள் சேதமடைந்தன.

நவிண்டில் பகுதியில் உள்ள சுடலை ஒன்றிலும் ஷெல் குண்டு விழுந்தது.

இதேவேளைஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் வல்வை முகாமை விட்டு சிப்பாய்கள் வெளியேற முயன்றதாகவும்

போராளிகளின் தாக்குதலையடுத்து அவர்கள் திரும்பிச்சென்றதாகவும் தெரியவருகிறது.

சனிக்கிழமையன்று வல்வை முகாமை அண்டிய பகுதிகளில் உள்ள சில வீடுகளும் சிப்பாய்களினால்குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகவும் தெரிகிறது.

(உ-160)

## படையினர் சூட்டுக்கு மட்டுநகரில் 2 பேர் பலி!

மட்டக்களப்பு, டிச. 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இரண்டு இடங்களில் ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலியாகினர்.

முதலாவது சம்பவம் குருமண்வெளியில் இடம்பெற்றது அங்கு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பெயர் தெரியாத தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இரண்டாவது சம்பவம் ஏறுவூரில் இடம்பெற்றது.

ரயில் பாதை வழியே நடந்துவந்த படையினர் மீது தேவபுரம் என்னும் இடத்தில் வைத்து கிரனேட் வீசப்பட்டது.

அதன்பின்னர் ஆயுதப் படையினர் சுட்டதில் கிராமவாசி ஒருவர் உயிரிழந்தார். (உ-எ-21)

---

**போராளிகளின் ஆயுதங்களை கைப்பற்றக் காலாயிருந்தவர்**

# இரகசியப் பொலீஸ் மோஹன்தாஸ் கட்டாய லீவில்!

சென்னை, டிச. 29

தமிழ்நாடு இரகசியப் பொலீஸ் ஆணையாளர் கே. மோஹன்தாஸ் அறுபது நாள் கட்டாய விடுமுறையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அனுப்பப்பட்டார்.

மத்திய அரசின் தலையீட்டைத் தொடர்ந்து தமிழ் நாடு அரசு, கட்டாய விடுமுறையில் செல்லும் உத்தரவைப் பிறப்பித்தது.

ஜனவரி முதலாம் திகதியில் இருந்து தனிப்பட்ட அலுவல் காரணமாக விடுமுறை கோரி திரு மோஹன்தாஸ் சமர்ப்பித்த விண்ணப்பத்தை தமிழ்நாடு அரசு ஏற்கவில்லை,

அதற்கு பதில் கடந்த

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கோணேசர் கோவில் கோபுரத்தில் நின்று அசிங்கம் புரியும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், டிசம்பர் 29

தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரர் ஆலயக் கோபுரத்தின் மீது சென்றி நிற்கும் இராணுவத்தினர், அங்கிருந்து சிறுநீர் கழித்து கோபுரத்தை அசுத்தம் செய்வதுடன் கோவிலையும் அசிங்கம் செய்கின்றனர்.

- இவ்வாறு தம்பலகாமம் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ம. க. கிருஷ்ண கோபால் தெரிவித்தார்.

கடந்த செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி முதல் இவ்வாலயத்தில் சிப்பாய்கள் நிலை கொண்டுள்ளனர்.

அன்றுமுதல் கோவில் பூசை, ஆராதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (உ-5)

## அரசுக்கு புலிகளுடன் இரகசியத் தொடர்பா?

### அமைச்சரவையில் எதிர்ப்பாம்

கொழும்பு, டிச. 29

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இரகசியத் தொடர்புகள் வைத்திருப்பதை முக்கிய அமைச்சர்கள் எதிர்த்துள்ளனராம்.

-- இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

புலிகளுடன் இரகசியமான முறையில் பேச்சுக்கள் நடத்துவது குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவே மிகுந்த எச்சரிக்கையாக இருக்கிறார் என்று கொழும்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி சென்னையில் இருந்து வெளியாகும் 'நியூஸ்ருடே' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(உ-எ)

### புலிகளின் கோரிக்கை பரிசீலனையில்

கொழும்பு, டிச 29

சிறைவைக்கப் பட்டுள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற புலிகளின் நிபந்தனையை அரசு பரிசீலனை செய்ய இருக்கின்றது.

இன்று கூடும் தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்படும் என்று தெரியவருகின்றது. (உ-எ)

### அரசின் அறிக்கை இன்று

கொழும்பு, டிச. 29

அரசகுழு ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் காங்கேசன்துறையில் நடத்திய பேச்சுக்கள் குறித்து அரசாங்கம் இன்று அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெகுஜன தொடர்பு நிலைய வட்டாரம் இதனைத் தெரிவித்தது.

(உ-எ)

## ரெலோ இயக்கம் தமிழகத்தை விட்டு வெளியேறத் தயார்!

### தலைவர் செல்வம் அறிவிப்பு

சென்னை, டிச. 29

முதலமைச்சர் ராமச்சந்திரன் விரும்பினால் தமிழ் ஈழவிடுதலை இயக்கம் தமிழ் நாட்டில் இருந்து வெளியேறத் தயாராக உள்ளது.

தமிழ் ஈழவிடுதலை இயக்கத் தலைவர் திரு. ஏ. செல்வம் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரெலோ போராளிகளை பரவலாக தமிழ்நாடு பொலீஸார் கைது செய்து துன்புறுத்துவது குறித்து திரு. செல்வம் பிரதமர் ராஜீவ்காந்தி வெளியுறவுச்செயலாளர் உள்துறைச் செயலாளர் ஆகியோருக்கு அவசரத் தந்திகள் அனுப்பியிருக்கிறார்.

திரு. செல்வம் மேலும் சொன்னதாவது; ரெலோவுக்கு தி. மு. க. வுடன் தொடர்பு இருப்பதாக நிரூபிக்க முயற்சிக்கப்படுகிறது.

இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் தி.மு.க.வுக்கு ஆதரவளிப்பதாக ரெலோமீது குற்றம் சாட்டப்படுகிறது.

தமிழ் நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளு

(4-ஆம் பக்கம் பார்க்க)

---

# ரூ. 50 லட்சம் பெறுமதி பொருள்களைக் காணோம்

## மார்பு சிகிச்சை நிலையத்தில்

யாழ்ப்பாணம், டிச. 29

கோட்டை முகாம் பகுதியில் நிலவும் சூழ்நிலை காரணமாக இயங்காதிருந்த பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையத்திலிருந்து சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் காணமல் போயிருக்கின்றன

இந்த சிகிச்சை நிலையத்தை மீண்டும் வேறு ஓர் இடத்தில் இயங்கச் செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனவே பண்ணை சிகிச்சை நிலையத்தில் இருந்து பொருட்களை எடுத்துச் சென்றவர்கள் அவற்றை மீளவும் ஒப்படைக்குமாறு சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்திருந்த இந்தச் சிகிச்சை நிலையத்தைப் பார்வையிடுவதற்கென சுகாதார அதிகாரிகள் குழு நேற்றுப் பண்ணைக்குச் சென்றது.

காப்டன் கொத்தலாவலையின் அனுமதியுடன் யாழ்-செயலக பொது சனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். குலசேகரம், டாக்டர் சி. இந்திரராசா, திரு. எஸ். எச்ஸ். ஞானசேகரம் ஆகியோருடன் வேறு அதிகாரிகளும் அங்கு சென்றனர்.

அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பல பெறுமதி மிக்க வைத்திய உபகரணங்கள் உட்பட கட்டடப் பொருட்கள் அனைத்தும் இனந் தெரியாதோரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமிழ் மக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்டவர்கள் இப்பொருட்களை சுகாதாரத் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## வின்செல்ட் மீண்டும் யாழ் வருவார்

கொழும்பு, டிச. 29

எட்டியாந் தோட்டை எம் பி. வின்செண்ட் பெரேரா தலைமையிலான அரச குழு, சென்னை செல்லும்முன்னர் மீண்டும் ஒருதரம் வடபகுதி விஜயத்தை மேற்கொள்ளும்.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (உ-ஐ-ஈ)

### சுபநேரம்

29-12-1986
திங்கட்கிழமை

சுபநேரம்:
12·28முதல் - 1·58வரை
ராகுகாலம்:
7 58 முதல் - 9·28 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்
கெர்ப்போட்டாரம்பம் 7. 32க்கு

## சிதம்பரம் குழு 'திரிசங்கு சொர்க்க'த்தில்!

புதுடில்லி, டிச 29

இலங்கை அரசு பின்வாங்கியதன் காரணமாக, சென்னை சென்று தமிழர் அமைப்புக்களை எப்படிச் சந்தித்துப் பேசுவது என்ற 'திரிசங்கு சொர்க்க' நிலையில் இந்திய இணை அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

கொழும்பு சென்ற சிதம்பரம் குழுவிடம் சமர்ப்பித்த யோசனை

(4-ம் பக்கம் பார்க்க)

### காகிதம் ஒன்றையே எரித்தேன்

## அரசியல் சாசனத்தை நான் எரிக்கவில்லை

### கருணாநிதி வாக்குமூலம்

சென்னை, டிச. 29

''தேவநாகிரி லிபியிலான ஹிந்தி இந்தியாவின் ஆட்சி மொழி'' இப்படி எழுதப்பட்ட கடதாசி ஒன்றையே நான் எரித்தேன் இந்திய அரசியல் சாசனத்தையோ, அல்லது அதன் ஒரு பகுதியையோ நான் எரிக்கவில்லை.

சைதாப்பேட்டை நீதிவான் முன்னிலையில் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குமூலத்தில் தி.மு.க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி முன்கண்டவாறு கூறியிருக்கிறார்.

இந்தித் திணிப்பை எதிர்க்கும் அடையாளமாகவே கடதாசித் துண்டுஒன்றைநான்எரித்

(4-ம் பக்கம் பார்க்க)

### புதிய ஆணையாளர்

சென்னை, டிச. 28

தமிழ்நாடு அரசின் புதிய இரகசிய பொலீஸ் ஆணையாளராக திரு. எஸ். ரவீந்திரன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பொலீஸ் மா அதிபராக திரு. ரவீந்திரன் முன்னர் பணியாற்றியவர்.

திரு. மோகன்தாஸ் கட்டாய லீவில் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்தே புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளது. (இ-ஐ-எ)

---

★ ஆயுதங்களைத் திருப்பித்தாருங்கள்
★ போராளிகளை விடுவியுங்கள் — அதுவரை

# பேச்சுக்கள் எவற்றிலும் பங்குபற்ற மாட்டோம்

## ரெலோ அறிக்கை

சென்னை, டிச. 29

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், தகவல் தொடர்பு சாதனங்களைத் திருப்பித் தந்து கைதான போராளிகளை விடுவிக்கும்வரை இனப்பிரச்சினை பற்றிய பேச்சு எதிலும் பங்குபற்ற மாட்டோம் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

சென்னையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இயக்கப் பேச்சாளர் ஸ்ரீகாந்த் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் ஏ. செல்வம் தலைமை

(4ம் பக்கம் பார்க்க)


### மட்டுநகரில் ஹெலியிலிருந்து சூடு!

மட்டக்களப்பு, டிச. 29

மட்டக்களப்பு படுவான் கரைப்பகுதியில் நேற்று நண்பகல் அளவில் ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கடத்தப்பட்ட மட்டக்களப்பு பதில் அரச அதிபர் திரு செல்வரத்தினம் கைவிடப்பட்ட வள்ளம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதைத் தொடர்ந்து இத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (உ-எ-21)

முச்சந்தி முனி



அப்ப என்ன, உந்த ஒப்பரேஷன்கள் எல்லாத்தையும் மோகன்தாஸ் தன்ரை சொந்தப் போக்கிலை செய்தவரோ...? நம்பலாமே...!

## பொதுமக்கள் மீது கொள்ளையர்கள் சூடு!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, டிச. 29

வவுனியாவில் கொள்ளையர்களை எதிர்க்க முயன்ற பொதுமக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக நெடுங்குளத்தைச் சேர்ந்த கிராமசேவையாளர் தேவராஜா காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

சனி இரவு வவுனியா வேப்பங்குளம் பகுதியில் உள்ள பி எஸ் அல்பிரட் என்பவரின் வீட்டினுள் இனந்தெரியாத- ஆயுதந்தாங்கிய- கோஷ்டியினர் உட்புகுந்தனர்.

அங்கிருந்த வயோதிபர் ஒருவரின் கையில் இருந்த மோதிரத்தைக் கழற்றிய கொள்ளையர்கள் அவரை மேலும் நகைகள் கேட்டுத் தாக்கியுள்ளனர்.

தாக்குதல் பொறுக்க முடியாத வயோதிபர் கத்திக் குழறவே அயலில் உள்ளவர்கள் ஓடிவந்தனர்.

இதனைத் தொடர்ந்து கொள்ளையர்கள் அவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுத் தப்பி ஓடினர். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

சேவை

போட்டோஸ்ரட்- ஜேனியோ

தாமான சாதிகத்தில் தெளிவான போட்டோஸ்டாட் பிரதிகள், ஜேனியோ பிரதிகளும் சகல தமிழ் — ஆங்கில ரைப்பின் வேலைகளுக்கும் யாழ்நகரில் முதன்மை நிறுவனம்; "கிளிக்ஸட்".

இல: 230, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ-பே-022893

விற்பனைக்கு

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு. எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தேவை

அனுபவமுள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள்தேவை உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர எண்: 41. மே/பா உதயன், த.பெ. எண்-23, யாழ்ப்பாணம்

பிறந்தநாள் வாழ்த்து

செல்வி நிரஞ்சினிதேவி

இணுவில் கிழக்கைச் சேர்ந்த நடராஜா ஜோகராணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி நிரஞ்சினிதேவி இன்று தனது 18ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். இவரை பெற்றோர், சகோதரர்கள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லைக்கந்தன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.


# பெருந்திரளானோர் கூடி நின்றனர்

காங்கேசன்துறை, டிச 29

காங்கேசன்துறையில் அரச குழு -புலிகள் குழு பேச்சுவார்த்தை நடைபெற்ற சமயம் பெருந்திரளான பொது மக்கள் அப்பகுதியில் திரண்டு நின்றனர்.

இரகசியப் பேச்சுக்கள் இடம் பெற்ற சமயம் அபிவிருத்திச்சபை உப அலுவலகக் கட்டடத்தைச்சுற்றி புலிகள் நவீன ஆயுதங்களுடன் காவல் காத்து நின்றனர்.

அரச குழுவும் புலிகள் குழுவும் வந்து சேர்வதற்கு முன்னர் அப்பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

சந்திப்பு இடம் பெற்ற போது, ஹெலி வட்டமிடவில்லை. அமைதியான சூழ்நிலைநிலவியது.

பலாலி விமானத்தளத்தில் வந்திறங்கிய அரசுக்குழு பின்னர் ஹெலிகொப்டரில் ஹார்பர் வியூ ஹோட்டல் இராணுவ முகாமுக்கு வந்து சேர்ந்தது.

அதன் பின்னர் மூடப்பட்ட இராணுவ வாகனத்தில் அரசுக் குழுவினர் ஐயனார் கோயிலடிச் சந்திக்கு வந்தனர். அங்கிருந்து காலை 10மணியளவில் குழுவினர் நடந்து பட்டினசபை மண்டபத்துக்கு வந்தனர். கூட வந்த இராணுவத்தினர் பின்னர் திரும்பிச் சென்றனர்.

புலிகள்குழு, திரு. கிட்டு தலைமையில்வந்தது. காங்கேசன்துறை சந்திக்குச் சென்று திரு. கிட்டுகுழுவினரை திரு. ஜெயபாலசிங்கம், கப்டன் கொத்தலாவலை ஆகியோர் அழைத்து வந்தனர்.

அபிவிருத்திச் சபை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு தம்பையா மகாலிங்கம் சகலரையும் மலர் மாலை சூட்டி வரவேற்றார். அரச தரப்பினர் புலிகளையும் புலிகள் அரச தரப்பினரையும் மலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

அலுவலக வாசலில் பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்தது.

அலுவலக சபாமண்டபத்தில் இரகசியச் சந்திப்பு இடம்பெற்றது. (இ-எ-68)

# கொழும்புதிரும்பியதும் லலித்துடன்ஆலோசனை

கொழும்பு, டிச. 29

புலிகளுடன் பேச்சு நடத்திவிட்டு அரசகுழு வெள்ளி பிற்பகல் கொழும்பு திரும்பியது.

வெள்ளி மாலை இக்குழு தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியைச் சந்தித்துக் கலந்தாலோசனை நடத்தியதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் அரச குழுவுக்கும் புலிகளுக்கும் இடையே காங்கேசன் துறையில் இரகசியப்பேச்சுக்கள் நடைபெற்ற சமயம் அமைச்சர் அத்துலத் முதலி பலாலி முகாமில் தங்கி இருந்தார் என்று ஊர்ஜித மற்ற செய்திகள் தெரிவித்தன. (அ-எ)

## கலைநகர் வீதி இருளில்

வட்டுக்கோட்டை டிச29

சித்தன்கேணி கலைநகர்ப்பகுதியில் மின் விளக்குகள் அடிக்கடி பழுதடைவதனால் இங்குள்ள பெரும்பாலான வீதிகள் இருளில் மூழ்கின்றன.

மின்விளக்குகளைத் திருத்துமாறும் திருத்த முடியாத மின்விளக்குகளை அகற்றிவிட்டு புதிய மின் விளக்குகளைப் பொருத்துமாறும் இங்குள்ள பொதுஸ்தாபனங்கள் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தைக் கேட்டுள்ளன. (இ-161)

## நன்கொடை

கரவெட்டி, டிச.29

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் அபிவிருத்திக்கென நெல்லியடி சனசமூக நிலையம் ஆறாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. இத்தொகை பாடசாலை அபிவிருத்திச் சபையிடம் கையளிக்கப்பட்டது (உ-70)

## இந்து சமயம் பற்றி உரை

யாழ்ப்பாணம் டிச. 29

''மொறிசியஸ் தீவுகளில் இந்து சமயம்'' --என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ நடராஜஐயர் பாலசுப்பிரமணிய சர்மா எதிர்வரும் திங்கள் பிற்பகல் 2 மணி அளவில் யாழ். பல்கலைக் கழக பழைய நூலகக் கட்டட 3ஆம் அறையில் உரை நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைப் பிரிவு இந்தச் சொற்பொழிவை ஒழுங்கு செய்துள்ளது. (உ-எ)

## புளியமரக் கன்றுகள் கேள்வுகள்

மாவட்ட பிரதான வீதிகளின் அருகே 1987ஆம் ஆண்டு பிற்பகுதியில் நாட்டப்படுவதற்கு 250 நல்ல இன புளியங்கன்றுகட்கு கேள்வுகள் கோரப்படுகின்றன. இவை பின்வரும் முறையினதாக இருத்தல் வேண்டும்.

1. சிறந்த இனத்தை உடையனவாயும்,
2. 3 அடிக்குக் குறையாத வளர்ச்சியுடையதாயும்,
3. பொலித்தின் உறையில் வேண்டிய மண் அணைப்புக்களுடன் வேரூன்றியவைகளாகவும்,

கன்றுகள் 1987ம் ஆண்டு செப்டம்பர் முற்பகுதியில் குறிப்பிட்ட பிரதான வீதிக்கு அண்மையில் உள்ள மாவட்ட அபிவிருத்திச் சபை உப பணிமனைகளில் கையளிக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்வுதாரர்கள் எனக்கு புளியமரக் கன்றுகள் வளர்க்கும் இடத்தையும் அறிவித்தல் அவசியமாகும். கேள்வுகள் எதிர்வரும் 15-01-1987 க்குப் பிந்தாமல், வை மு. பஞ்சலிங்கம் மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும், செயலகம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்வுகளின் மேல்உறையின் இடதுபக்கமேல் மூலையில் ''புளியமரக் கன்றுக்கான கேள்வு'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இவை நேரடியாக யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தரின் அறையில் உள்ள கேள்வுப் பெட்டியிலும் சேர்க்கப்படலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்
யாழ் மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபரும்.

யாழ்

# பொலீஸ் நிலையக் கட்டடத்தில் முகாம் அமைக்க முயற்சி?

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ். பொலிஸ் நிலையக் கட்டடத்தில் சிப்பாய்கள்முகாம் அமைக்க முயற்சி எடுத்து வருகின்றனர்.

இதன் ஆரம்ப கட்டமாக இக் கட்டடத்தில் இடிந்த பகுதிகளில் மண் மூடைகளை அடுக்குவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியில் இருந்தே இராணுவ வாகனங்களில், மண் ஏற்றப்பட்டு இங்கு பறிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது (இ-10)

## மூன்று வீதிகள் அமைப்பு

மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நடப்பாண்டில் மூன்று வீதி அபிவிருத்தி வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்து முடித்துள்ளது.

# கடமை கண்ணியம் உள்ளவருக்கே தபால் சேவகர் பதவி பொருத்தமானது

வட்டுக்கோட்டை,டிச29

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவர்களுக்கும் நேர்மையானவர்களுக்குமே தபாற் சேவகர் பதவி பொருத்தமாகும்.

வட்டுக்கோட்டைத் தபால் நிலைய தபாலதிபர் திரு. கே. சம்பந்தமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை தபால் நிலையத்தில் சுமார் 38 ஆண்டுகள் சிரேஷ்ட தபால் சேவகராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. கந்தையா மகாலிங்கத்திற்கு வட்டுக்கோட்டை தாபால் நிலைய ஊழியர்களினால் நடத்தப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவுக்குத் தலைமை வகித்து தபால் அதிபர் திரு. கே. திருஞானசம்பந்தமூர்த்தி உரையாற்றினார்.

உதவித் தபால் அதிபர்கள் திரு. என். சண்முகம், திரு. எஸ். சிவப்பிரகாசம், திரு. பொ. த. அரசகுலசிங்கம் ஆகியோரும் தபால் சேவகர்கள் திரு. எஸ் பரமசிவம், திரு. எஸ் தனராசா, திரு. எஸ். சந்திரன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

உதவித் தபால் அதிபர் திரு. எஸ். தாமோதரம்பிள்ளை பரிசில்களை வழங்கினார். (இ-161)



ஸ்ருடியோ வீனஸ் தயாரிக்கும் 'கலைந்த ராகங்கள்' என்னும் திரைப்பட ஆரம்ப விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம் இடமிருந்து வலமாக திரைக்கதை வசனம் எழுதி முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் திரு வை. சிவபாலன் திரைப்படத்தை ஆரம்பித்து வைத்த மாநகர சபை ஆணையாளர் திரு சி.வி.கே. சிவஞானம், படத்தின் கமராமேனும் இயக்குனருமான திரு வி. சுப்பிரமணியம் தயாரிப்பாளர், திரு செ. சற்குணனந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர். (உ)

## வவுனியாவில் கொள்ளை

வவுனியா டிச. 29

வவுனியா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும், ரூபா 25ஆயிரமும் இனந் தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டன.

வெள்ளிக்கிழமை இரவு இச் சம்பவம் நடந்தது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கண்டி வீதியில் அமைந்திருக்கிறது. (இ-10

## சுண்டுக்குளியில் திருடர் தொல்லை

யாழ்ப்பாணம், டிச. 29

சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வு பகுதியில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளது.

அண்மையில் எஸ். சுப்பையா என்பவரது வீட்டில் கொள்ளையிட முனைந்த நபர் ஒருவர் பிடிக்கப்பட்டு இளைஞர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். (இ-10)

## யுவதி கைது

மட்டக்களப்பு, டிச 29

ஆரையம்பதியைச் சேர்ந்த தமிழ் யுவதி ஒருவர் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

இந்த யுவதியின் தந்தை சகோதரி ஆகியோர் ஏற்பனவே கைதுசெய்யப்பட்டு கல்லாறு முகாமில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ-21)

# சுன்னாகத்தில் நத்தார் ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிச. 29

சுன்னாகம் புனித அந்தோனியார் பாலர் பாடசாலையின் ஒளிவிழா சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் சுன்னாகம் றோ. க. பாடசாலை அதிபர் திரு. பதுவை நாயகம் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர் கலை நிகழ்ச்சியுடன் ஆரம்பமான இவ் விழாவில் பிரதம விருந்தினராக, சுன்னாகம் பங்குத்தந்தை அதி வண. அல்பிறட் யோகராசா அடிகளார் கலந்துகொண்டார்.

அவர் உரையாற்றுகையில் இந்துக்களுக்கு எப்படி தீபாவளி தினமும், பௌத்தர்களுக்கு எப்படி வெசாக்தினமும் அமைகிறதோ அதே போல்கிறிஸ்மஸும் சிறப்புப் பெற்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகில் உதித்த பரமன் கிறீஸ்துவின் பிறப்பை இச்சின்னஞ்சிறிய குழந்தைகள் நினைவு கூர்ந்து விழா எடுப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை செல்வி செ. மல்லிகா உடம்டன் மாகாவித்தியாலய ஆசிரியை திருமதி. கியோமர் மரியதாஸ். பாலர் பாடசாலை ஆசிரியர் செல்வி. அ. மரியராணி. பாடசாலை பொறுப்பாளர் திரு. அ. அல்பிறேற் யாழ் குருமட மாணவன் செல்வன் தா. அன்ரன் குமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (இ)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# சமூக விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்த இலக்கியங்கள்

## 'ஆகுதி' ஆய்வுரையில் உரை

பண்டத்தரிப்பு, டிச.29

சமுதாயத்தில் உயர்ந்த நிலையைப் பிடித்துக் கொண்டவர்களின் குறைகளை, சிறுமைகளை, சமூக விரோத நடவடிக்கைகளை இலக்கியப் படைப்புக்கள்மூலம் எழுத்தாளர்கள் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இந்த வகையில் அந்தணர்களில் ஒரு சிலர் இலைமறை காயாக இருந்து செய்யும் சமய நாசச் செயல்களைப் பகிரங்கப் படுத்துவது அவசியம்.

இலக்கிய விமர்சகர் மாதகல் வ. கந்தசாமி இவ்வாறு கூறினார்.

எழுத்தாளர் நா. சோமகாந்தனின் 'ஆகுதி' (சிறுகதைத் தொகுதி) நூல் வெளியீட்டு விழாவில் அவர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

பண்டத்தரிப்பு கிராம சபை மண்டபத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக ஒன்றியத் தலைவர் திரு. வ. செகராஜசேகரம் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

மாதகல் வ கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் தெய்வங்களோ என மதிப்பும் மரியாதையும் செய்யத்தக்க பல பண்பு மிகு அந்தணர்கள் இருக்கிறார்கள். அதேபோல இலைமறை காயாகவும் இருந்து செய்யும், சமூக விரோத சமய நாசச் செயல்கள் எமது சமல்த்தை பெரிதும் தாழ்வு படுத்துகின்றன.

இந்த நிலைமை மாறவும் குருக்கள் குருக்களாக மதிக்கப்படவும் எதிர்காலப் படைப்புக்களில் அந்தணர்களின் பலவீனங்களும் அம்பலப் படுத்தப்படுவது அவசியம்.

சோமகாந்தன் அவர்களின் இலக்கியத் தொண்டு காத்திரமானது மட்டுமல்ல தனித்துவமானதுங்கூட.

இப்படி அவர் கூறினார்.

உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தினி சுப்பிரமணியம் தமது ஆசிச் செய்தியில் எழுத்தாளர்களின் ஆக்கப் பணியைப் பெரிதும் பாராட்டியிருந்தார்.

சோமகாந்தன் தமது பதிலுரையில் எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை வைடூரியங்கள் என எண்ணுவது இயல்பு உண்மையறிய விமர்சகர் வாசகர் வாய்களைக் கிளற வேண்டும் என்றார். (இ-120)

## குறைந்தவிலையில் கொப்பிகள்

வேலணை, டிச. 29

வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி அப்பியாசக் கொப்பிகள் மிகவும் குறைந்த விலையிலே விற்பனை செய்து வருகின்றது.

தீவுப்பகுதி பாடசாலைகள் தமது சங்கத்துடன் தொடர்பு கொண்டால் கூடிய கழிவுடன் அப்பியாசப் புத்தகங்களை வழங்க தாங்கள் தயாராக இருப்பதாக இச் சங்கத்தின் நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-167)

# கர்ப்பத்தடையில் அதிகளவு நாட்டம்

யாழ்ப்பாணம், டிச. 29

வடமாகாணத்தில் இந்த வருடம் மட்டும் சுமார் ஆயிரம் பேர் கர்ப்பத்தடை செய்துள்ளனர்.

கர்ப்பத்தடை செய்வோர் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகின்றன.

கர்ப்பத்தடை செய்வோரில் அதிகமானோர் பெண்கள் என்றும் ஆண்கள் ஒரு சிலரே இதனைச் செய்வதாகவும் மேலும் தெரிய வருகிறது

கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணத்தின் கிராமப்புறங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த கடற்தொழில், விவசாயம், கூலிவேலை செய்வோர்களே அதிகளவு இச் சிகிச்சையில் அக்கறை எடுத்து வருகின்றனர்.

கர்ப்பத்தடை செய்வது ஒவ்வொரு தமிழனின் தற்கொலைக்குச் சமம் என கடந்த வருடம் அளவில் விடுதலைப் புலிகள் சுவரொட்டிகளை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தீவுப்பகுதிக்கான 'திரிபோச' வந்து சேர்ந்தது

ஊர்காவற்றுறை.டிச.29

தீவுப்பகுதிக் குழந்தைகளுக்கான 'திரிபோச' மா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு வந்துசேர்ந்தமாப்பைகள் தற்போது இப்பகுதி குடும்பநல சேவை உத்தியோகத்தர்களூடாக பல இடங்களுக்கும் விநியோகிக்கபபடுகின்றன.

இரண்டு, மூன்று மாதங்களுக்குத் தேவையான 'திரிபோச' மாப்பைகள் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சீரற்ற போக்குவரத்துக் கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-16)

## திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ் செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக திரு. வே. துரைசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இவர் வவுனியா செயலகத்தில் கடமை புரிந்தார்.

யாழ் செயலகத்தில் கடமை புரிந்து இடமாற்றம் பெற்றுள்ள திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி. சரோஜினி கணேந்திரன் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-5)

## மக்கள் முகம்

### சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையம்

சுன்னாகம்'டிச 29

சுன்னாகம் அம்பேத்கார் சன சமூக நிலையத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது

தெரிவுகள் அனைத்தும் ஏகமனதாக இடம் பெற்றன.

தலைவர்: திரு. சபாபுஷ்பநாதன். உப தலைவர்கள்: திரு. எஸ் யோகானந்தராசா திருமதி. யோ பஞ்சாட்சரராணி. செயலாளர்; திரு செ. குலசிங்கம். உதவி செயலாளர்; திரு. க. யோகலிங்கம் பொருளாளர்: திரு கா. வர்ணகுலசிங்கம். பத்திராதிபர்; திரு. எஸ் புவர்ணனந்தன். கணக்காய்வாளர்: திரு. க சிவசுப்பிரமணியம் டாக்டர் (செல்வி) றேணுகா சபாபதி, திருவாளர்கள் கே. மார்க்கண்டன், எஸ். நவரத்தினலிங்கம், பொ. குணரத்தினம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-27

# மட்டக்களப்பில் துப்பாக்கிப் பிரயோகம்

மட்டக்களப்பு, டிச. 29

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப் படையினர் இரண்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

குருக்கள் மடம் என்னும் இடத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வி. கோபால பிள்ளை என்பவர் காயமடைந்தார். கடற்கரையில் இருந்து வந்துகொண்டிருந்த அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம்மேற்கொள்ளப்பட்டது.

அவர் இறந்தாரா? என்பது தெரியவில்லை. அவரை அப்படியே தூக்கி டிரக்கில் போட்டுக்கொண்டு படையினர் சென்றனர்.

இரண்டாவது துப்பாக்கிப் பிரயோகம் வந்தாறுமூலை சந்தியெலியில் இடம்பெற்றது.

திலகர் என்ற இளைஞர் இதில் உயிரிழந்தார் என்று தெரிகிறது. (இ-எ-21)

# கொமாண்டோக்கள் அழைத்துச் சென்ற யுவதி விடுவிக்கப்படவில்லை

அம்பாறை, டிச. 29

கல்முனை மணற்சேனையைச் சேர்ந்த 22 வயது யுவதி ஒருவரை, அவரது வீட்டிலிருந்து கூட்டிச் சென்ற அதிரடிப் படையினர், மூன்று நாட்களின் பின்னரும் விடுவிக்கவில்லை.

ஜி சி ஈ சாதாரணதர வகுப்பில் தேறிவிட்டு வீட்டில் இருந்த இந்த யுவதியை விசாரணை செய்யப்போவதாகக்கூறி அதிரடிப்படையினர் களுவாஞ்சிக்குடி முகாமுக்கு அழைத்துச் சென்றதாக கூறப்படுகிறது.

இது குறித்து அம்பாறை மாவட்ட முன்னாள் உறுப்பினர் திரு. கா. வேல்முருகு, மட்டக்களப்பு மாவட்ட இணைப்பு அதிகாரியிடம் முறையிட்டார்.

விசாரணையின் பின்னர் யுவதி விடுவிக்கப் படுவார் என இணைப்பு அதிகாரி உறுதியளித்தார். (ஆ-14)

## நோய் பரவுகிறது

கரவெட்டி, டிச 29

வடமராட்சிப் பகுதியில் காய்ச்சல், சிரங்கு நோய்கள் வேகமாய்ப் பரவி வருகிறது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் தினமும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

எங்கெல்லாம் சர்வாதிகாரம் உண்டோ அங்கெல்லாம் அநீதியும் அராஜகமும் இருக்கும்.

— மகாத்மா காந்தி

உதயன்
இல,15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 29-12-1986 த.பெ இல 23

## காத்திரமான அரசியல் சாணக்கியம் தேவை

கடந்த சனிக்கிழமை காங்கேசன்துறையில் வைத்துப் புதிய சரித்திரம் ஒன்று படைக்கப்பட்டது. ஆம், அரசாங்கத் தூதுக்குழு ஒன்றும், தமிழ்ப் போராளிகள் குழு ஒன்றும் முதற்தடவையாக வெளியார் எவருமின்றி இலங்கையிலேயே சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தின.

அரசாங்கத் தகவல் சாதனங்கள் தமிழ்ப் போராளிகளுக்குப் பயங்கரவாதிகள் எனப் பட்டம் கட்டி நூற்றுக்கு நூறு திரிக்கப்பட்ட பொய்யான செய்திகளை தென்னிலங்கை மக்களுக்கும் உலக மக்களுக்கும் பரப்பி வருகின்றன.

அதனால் தென்னிலங்கை மக்கள் மத்தியில் தமிழர் போராட்டத்தைக் குறித்தும், போராளிகள் குறித்தும் தப்பான அபிப்பிராயங்கள் — கருத்துக்கள் வேரூன்றிவிட்டன.

அவற்றை மாற்றும் விதத்தில் கடந்த மூன்று மாதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள், வெகு திருப்பமான நடவடிக்கைகளை அடுத்தடுத்து எடுத்து வந்தனர். மன்னாரில் இறந்த சிப்பாய்களின் சடலங்களை இராணுவத்திடம் ஒப்படைத்தது. கைது செய்த சிப்பாய்களை சுட்டுக் கொல்லாமல் கௌரவமான முறையில் நடத்தி அவர்களை விடுவித்தது.

இந்த இரண்டு செயல்களும் தென்னிலங்கையில் மக்கள் மத்தியில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அவர்களிடையே புரிந்துணர்வும் உதித்துள்ளது. அதனால் அரசாங்கத்தின் வேடத்தைச் சிங்கள மக்களில் பலர் கண்டு கொள்ளும் நிலைமை உருவாகி உள்ளது இது அரசாங்கத்துக்குப் பெரும் ஆபத்தாகி வருகிறது.

அதனை நன்றாகப் புரிந்து கொண்ட அரசு, தனது 'கெச்சிதத்தைக்' குறைத்துப் படி இறங்கி உள்ளது. போராளிகளுடன் நேரடியாகப் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் உள்ளதாகக் காட்டுகிறது. இது வெறும் நடிப்பாகவும் இருக்கலாம்.

இலங்கை அரசும் அதன் தலைவர்களும் உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதில் தீரர்கள். நேரத்துக்கு நேரம் கொள்கை, முடிவு ஆகியவற்றை மாற்றி வேடம் போடுவதில் சூரர்கள். அதிலும் அமைச்சர் அத்துலத்முதலி பெரும் சாதனை வீரர்; அவரை விஞ்ச எவருமிலர்.

போராளிகளுடன் நேரடியாகப் பேச வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் விழுந்தடிப்பதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

இனப்பிரச்சினை விவகாரத்தில், இந்தியாவை மெதுவாக, நைசாக, ஒதுக்கிவிட வேண்டும் என்பதே இலங்கையின் உள்நோக்கம். பொறிக்குள் அகப்பட்ட எலி போல எதையும் செய்ய முடியாமல்— மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையில்— இப்போது அரசு சிக்கித் தவிக்கிறது அதிலிருந்து விடுபட நேரடிப் பேச்சு ஒரு தகுந்த மார்க்கம் என்று அது கருதுகிறது.

போராளிகளின் ஆயுதங்களை இந்திய அரசு (தமிழக அரசு) கைப்பற்றிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள அது முயல்கிறது.

ஆனால் —

இலங்கை அரசாங்கத்தை நம்பித் நாம் தனித்துப் பேச முடியாது. இந்தியாவின் நல்லெண்ண–நேரடி மேற்பார்வையில் பேசியே பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்' இதுவே தமிழீழப் புலிகளின் நிலைப்பாடு. இவ்வாறு புலிகளின் யாழ். மாவட்டத் தளபதியும், சனிக்கிழமைப் பேச்சுக்குத் தலைமை வகித்தவருமான திரு கிட்டு அறிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை என்ற பேரில் தமிழ்த் தலைவர்களை அரசு எப்படி ஏற்கனவே ஏமாற்றியது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவையே அது ஏய்த்காட்டி வருவதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இதற்கிடையில்—

கூட்டணியின் பாதையில் விடுதலைப் புலிகளும் அரசின் ஆசை வார்த்தைக்கு மோசம் போய் விடுவார்களோ?

போராட்டம் என்று புறப்பட்டவர்கள் பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டுமா? என்று கேட்கும் சிலரும் எம்மத்தியில் இல்லாமல் இல்லை.

நூற்றுக்கு நூறு ஆயுதப்போராட்டம் மூலம் உரிமைகளை வென்றெடுப்பது என்பது மிகவும் கடினம். வெளிச்சக்தி ஒன்றின் உதவி இன்றி தனித்துப் போராடி வெல்வது என்பதும் இயலாத காரியம்.

உரிமைப் போராட்டத்தை தனி இராணுவ நடவடிக்கை மூலம் நசுக்கி விடலாம் என அதிகாரத்தில் உள்ளோர் எண்ணுவதும் மனப்பால் குடிப்பதாகும். அதனை அமைச்சர் அத்துலத்தே உணர்ந்து வருகிறார்.

தமிழர் நிலையைப் பொறுத்த மட்டில் போராட்டத்தின் மூலம் அரசைப் படி இறங்கச் செய்து பேச்சுவார்த்தை மூலம் எமது உரிமைகளை வென்றெடுப்பதே சிறந்த மார்க்கம்.

அந்தப் பேச்சுவார்த்தையின் போது ஏமாந்துவிடாமல், ஏமாற்றப்படாமல் பார்த்துக் கொள்வது பிரதானம். இந்தியாவின் நல்லெண்ண மத்தியஸ்தம் அதற்கு உதவலாம். ஆனால் அந்த நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு இந்தியா ஈழத் தமிழர் மீது குதிரைவிடவும் அனுமதிக்கக் கூடாது.

இதற்கு தெளிவு, களிவுகளை நேராக்கி வெல்லக்கூடிய காத்திரமான அரசியல் சாணக்கியமும் ராஜதந்திரமும் மிக அவசியம்.

# எத்தியோப்பியாவில் மீண்டும் ஜனநாயகம்?

# விரைவில் வாக்கெடுப்பு

## ராணுவ நிர்வாகம் அறிவிப்பு

அடிஸ் அபாபா, டிச. 28

எத்தியோப்பியாவில் புதிதாக ஜனநாயக குடியரசு ஒன்று அமையுமா? இதற்கான மக்கள் அபிப்பிராயம் திரட்டப்படுவதாக அடிஸ்அபாபாவிலிருந்து வெளியான செய்திகள் கூறுகின்றன.

அரசியல் சாசன கருத்துக் கமிஷனின் முதலாவது கூட்டத் தொடரில் உரை நிகழ்த்திய எத்தியோப்பியா ராணுவத் தளபதியும் பதில் ஜனாதிபதியுமான மென்சிஸ்ரோ கெயிலே மாரியாம் இதனைத் தெரிவித்தார்.

1974 ஆம் ஆண்டு மன்னர் கெய்லே செலாஸி பதவியிலிருந்து விலக்கப்பட்டதும் அமைக்கப்பட்ட தற்காலிக ராணுவ நிர்வாகத்தின் தலைமையில் எத்தியோப்பியா இதுவரை செயல்பட்டு வருகின்றது. (ஒ)

### புற்று நோய்க்கு இதுவும் காரணம்

மனித உயிர்களில் புற்றுநோய் தோன்றுவதற்கு சுற்றுப்புறச் சுகாதாரமும் முக்கிய காரணமாகின்றது என இந்திய துணை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

### கெரில்லாக்களை ஒழிக்க உதவி

மனுகுவா, டிச. 28

ஹொண்டுராஸில் இருந்து செயற்படும் பத்தாயிரத்திற்கும் அதிகமான நிக்கராகுவா கெரில்லாக்களின் தொல்லையை ஒழிக்கவேண்டும்.

இதற்கான சகல உதவிகளையும் ஹொண்டுராஸிற்கு வழங்கப்போவதாக நிக்கராகுவா ஜனாதிபதி டானியல் ஒட்டேகா தெரிவித்தார்.

நிக்கராகுவாவின் சாண்டனிஸ் அரசுக்கு எதிரான ஹொண்டுராஸ் கிளர்ச்சிவாதிகளை ஏற்று அவர்களுக்கு மன்னிப்பை வழங்கவும் ஏனைய நாடுகளுக்குச் சென்று குடியேற வசதி செய்து கொடுக்கவும் தயார் எனவும் ஒட்டேகா மேலும் தெரிவித்தார்.

எல்லைச் சம்பவங்களை முடிவிற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் இதனை அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

**வெளி உலகில்**

### எதிர்க் கட்சிகள் பேச்சு வார்த்தை

சியோல், டிச. 28

தென் கொரியாவில் அரசியல் சீர் திருத்தம் பற்றிய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முன் வந்துள்ளன.

ஆளும் ஜனநாயக நீதிக் கட்சி கடந்த வெள்ளிக்கிழமை எதிர்க் கட்சியினருடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்ததைத் தொடர்ந்தே எதிர்க்கட்சிகள் இந்த அறிவிப்பை வெளியிட்டன.

பிரதான எதிர்க்கட்சியான கொரியா ஜனநாயக கட்சியின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் கூட்டு அமைச்சரவையை ஏற்படுத்தத் தயார் என அறிவித்தது (ஒ)

### எம். ஜீ. ஆரின் பரம்பரை நூல்

சென்னை, டிச. 28

தமிழ்நாடு முதல் அமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனின் முன்னோர்களின் சரித்திர வரலாறு ஆராயப்பட்டு நூலுருப் பெற்றுள்ளது

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் புலவர் ராசு இதனை எழுதியுள்ளார்.

அண்மையில் தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் இந்த நூலை வெளியிட்டு வைக்க ம பொ சிவஞானம் முதலாவது பிரதியை பெற்றுக் கொண்டார். (ஒ)

### கடத்தல் முறியடிப்பு

டாக்கா, டிச. 28

பங்களாதேஷில் மிகப் பெரிய தங்கக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

நிறுக்கும் இயந்திரம் ஒன்றில் வைத்து சுமார் 20 லட்சம் டாலர் பெறுமதியான தங்கப்பாளம் கடத்த முயற்சிக்கப்பட்டது.

குவைத்தில் இருந்து காட்மண்டு ஊடாக பயணம் செய்த பங்களாதேஷ் பிரஜை ஒருவர் இதில் சம்பந்தப்பட்டிருந்தார். (ஒ)

### பிரிட்டன் கோரிக்கை

ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்ய துருப்புக்களை விரைவில் விலக்கிக் கொள்ளுமாறு பிரிட்டன் ரஷ்யாவைக் கேட்டுள்ளது.

## வளைகுடாவில் உக்கிரமான போர்

பக்தாத், டிச. 28

ஈரானும், ஈராக்கும் தன்முனை யுத்தத்தில் வெற்றி நமக்கே என்று தெரிவித்துள்ளது.

ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான தென் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள நீரணைக்கு அப்பால் இரண்டு நாட்களாக நடைபெற்ற கடும் யுத்தத்தில் ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்கள் இருதரப்பிலும் பலியானதாக பி. பி. சி தெரிவித்தது

ஈராக்கிய படைகள் ஈரானிய படைகளை நிர்மூலமாக்கின என்று பக்தாத் ராணுவ உயர்பீடம் அறிவித்தது ஈரானிய தரப்பில் பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டதாகவும் இந்த அறிக்கை தெரிவித்தது.

இதே சமயம் ஈரானிய ராணுவ பேச்சாளர் ஒருவர் இந்த யுத்தம் பற்றித் தெரிவிக்கையில் ஈராக் துருப்புக்கள் குவிக்கப்பட்டதனால் அதனை ஒழிக்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலை நடத்தியதாகவும் இதனால் ஈராக்கிய ராணுவ சிப்பாய்கள் மூவாயிரம் பேர் பலியானதாகவும் தெரிவித்தார். (ஒ)

### ஆலோசகர் நியமனம்

வாஷிங்டன், டிச. 28

ஈரானுக்கு ஆயுதங்களை ரகசியமாக வழங்கிய விவகாரம் பற்றி ஆராய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி றேகன் விசேட ஆலோசகர் ஒருவரை நியமித்துள்ளார்.

வெள்ளைமாளிகை குழுவிற்கு இந்த விசேட ஆலோசகரான டேவிட் அட்ஸியா தலைமை தாங்குவார்.

60 வயதுடைய அட்ஸியா பெல்ஜியத்தில் உள்ள நேட்டோ ஸ்தாபன தலைமை அலுவலகத்தில் அமெரிக்க தூதுவராக 1983 ஆம் ஆண்டிலிருந்து கடமை புரிந்து வருகின்றார்.

இவர் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி விசேட ஆலோசகர் பதவியை ஏற்பார் எனவும் இவருக்கு அமைச்சர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது எனவும் வெள்ளை மாளிகை தெரிவித்தது (ஒ)

### பிரேரணை தோல்வி

மத்திய பிரதேச சட்டப்பேரவை மோதிலால் போரா தலைமையிலான அமைச்சரவைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எட்டு மணிநேர விவாதத்தின் பின் நிராகரித்தது.

### அந்தமானில் ராஜீவ்

பிரதமர் ராஜீவ் காந்தி மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குச் சென்றுள்ளார்.

### தடை மாநிலம்

பஞ்சாப் மாநிலம் வெளிநாட்டவர்களுக்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக ஜூலை மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களை ஊக்குவிக்க விசேட போனஸ் திட்டம்

## நிர்வாகச் சீர்திருத்தக் குழுமுன் சாட்சியம்

கொழும்பு, டிச. 29

ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விசேட போனஸ் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவது அவசியமாகும்.

இப்படி அகில இலங்கை ஆங்கில ஆசிரிய சங்கத் தூதுக்குழு ஒன்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தது.

- ஆசிரியர்களுக்கு வைத்திய காப்புறுதித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.
- சில வகையான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கும் பென்ஷன் கிடைக்க வழி செய்ய வேண்டும். பல வருட சேவையின் பின்னரே அரச ஊழியர் பென்ஷன் பெறுகிறார். அந்த உரிமையைப் பறிக்கக் கூடாது
- ஆசிரியருக்குப் பதவி உயர்வு சிரேஷ்ட அடிப்படையிலும் தகுதி அடிப்படையிலும் வழங்கப்பட வேண்டும்.
- பெண் அரச ஊழியர்களுக்கு முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் பிரசவ விடு முறை வழங்கப்படுகிறது இது நீடிக்கப்பட வேண்டும்.
- அரச ஊழியர்கள் 20 வருட சேவையை முடித்த பின்னரோ— அல்லது 45 வயதை அடையாத பின்னரோ இளைப்பாற அனுமதிக்கப்படவேண்டும்.

இக் கோரிக்கைகளை சங்கத் தூதுக்குழு நிர்வாகச் சீர்திருத்தக் குழு முன் வைத்தது.

(உ–எ)

# யாழ் நகரில் வடிகால் அமைக்க 'யுனிசெப்' நிதி உதவி

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வடிகால்கள் அமைப்பதற்கு 'யுனிசெப்' நிறுவனம் உதவ முன்வந்துள்ளது.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி வி. கே. சிவஞானம் இதனைத் தெரிவித்தார்.

வடிகால் அமைப்புக்கென அடுத்த ஆண்டு 13 லட்ச ரூபாயை மாநகரசபை ஒதுக்கியுள்ளது.

நாவாந்துறைப் பகுதியில் வடிகால்கள் அமைப்பதற்கென 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவை, யுனிசெப், தந்துதவியுள்ளது.

யுனிசெப்புடன் மாநகரசபை நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனாக வடிகால்கள் அமைக்க நாவாந்துறைப் பகுதிக்கு மேலும் 9லட்சம் ரூபாயும், குருநகர் பகுதிக்கு 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் தந்துதவ யுனிசெப் தீர்மானித்துள்ளது.

அனேகமாக இந்த நிதி உதவி அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று ஆணையாளர் தெரிவித்தார்.

(உ–5)

### நாற்று மேடை போட்டியில் பரிசு

சாவகச்சேரி டிச. 29

நாற்றுமேடைப் போட்டியில் மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தையும், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதலாவது இடத்தையும் பெற்ற கச்சாயைச் சேர்ந்த திரு, எஸ். அண்ணாமலை பரிசு அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா தலைமையில் நடந்த வைபவத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் திரு. பே. பிலிப் பணப்பரிசை வழங்கினர். (இ–31)

# நாரந்தனைப் பகுதியில் தற்காலிக மின் இணைப்பு துண்டிப்பு


## துஷ்பிரயோகமே காரணமாம்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் நாரந்தனை உப அலுவலக எல்லைக்குள் வழங்கப்பட்ட தற்காலிக மின் இணைப்புக்கள் துண்டிக்கபட்டன.

வசதி குறைந்த மக்களின் நலன் கருதி சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிக மின் இணைப்புக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாலேயே அவை துண்டிக்கப்பட்டன என்று தெரிவிக்கப் படுகின்றது

இதுபற்றி மேற்படி உபஅலுவலக மின் அத்தியட்சகர கருத்துத் தெரிவிக்கையில், சலுகை அடிப்படையில் ஏழைமக்களின் நலன் கருதி தற்காலிக மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டன என்றும் ஆனால் பாது [illegible] கள் பலவந்தமாக இதே [illegible] அங்கீகாரம் இன்றி பாவனையாளர்களால் இணைப்புகள் பெறப்பட்டன என்றும் இதனால் ஏற்படும் ஆபத்தான நிலையைத் தவிர்ப்பதற்கு உடனடியாக இவை துண்டிக்கப்பட்டன. என்றும் தெரிவித்தார்.

மேலும் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் [illegible] மின் இணைப்புக்கள் வழங் [illegible] மின் அத்தியட்சகர் கூறினார். (இ–16)



**பொய்யாமொழி**

குறள்:

மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

பொருள்:

பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவர்க்கு உடம்பும் மிகையான பொருள்; ஆகையால் அதற்குமேல் வேறு தொடர்பு கொள்வது ஏனோ?

# செயல்முறை விளக்கங்களுடன் மாணவர்களுக்கு கல்விப் போதனை

## தொழில் நுட்பக் கல்வி அலுவலர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிச. 29

மாணவர்களின் கல்வி செயல்முறை மூலமான விளக்கங்களுடன் அமைதல் வேண்டும் என தொழில் நுட்பக் கல்வி அலுவலர் திரு. ச. சுப்பிரமணியம் கூறினார்.

''குறைந்த செலவில் தொழில்கல்விப் பொருட்களைத் தயாரித்தல்'' பற்றி யாழ் கல்வித் திணைக்களம் வலய ஆசிரிய ஆலோசகர்களுக்கு நடத்திய கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறுகூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:–

ஒரு பொருளைப்பற்றி மாணவர்கள் கற்றல் அவ்வறிவை வைத்து அதிக பயனுள்ள வேறு ஒரு பொருளை கண்டு பிடிக்கும் திறனை அவர்கள் பெறவேண்டும்,

வெறும் ஏட்டுக் கல்வி மூலம் இத்திறனை அவர்கள் பெற முடியாது.

செய் முறையோடு கூடிய கல்வியே இவ்வகை திறனை அவர்களுக்கு வழங்கும் – என்றார்

யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு விஞ்ஞான கல்விபதிகாரி திரு. எஸ். நடராசா தலைமை வகித்தார்.

சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் திரு. எஸ். அம்பிகாவரன் நன்றியுரைநிகழ்த்தினர்.

(உ–5)

### இளம் ஆசிரியர் விபத்தில் பலி.

# சாரதியை நீதிமன்றில் ஆஜர் செய்யப் பணிப்பு

கொடிகாமம், டிச. 29

மீசாலை கண்டிவீதியில் தலை பிளந்த நிலையில் இளம் ஆசிரியர் ஒருவர் மரணமான மினிபஸ் விபத்துச் சம்பவம் தொடர்பாக பஸ்ஸின் சாரதியை பஸ்ஸுடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மரணவிசாரணை அதிகாரி பணித்தார்.

இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்திய சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. என் தருமேந்திரன் அப்பகுதி கிராம சேவையாளருக்கு இப்பணிப்புரையை விடுத்தார்.

கடந்த 20 ஆம் திகதி காலை மீசாலை வடக்கு இராமாவில் முருகன் கோயிலுக்குச் சமீபமாக இந்த விபத்து நடந்தது.

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் கல்வி போதிக்கும் கொடிகாமத்தைச் சேர்ந்த இளம் ஆசிரியர் திரு. ச. பிரபாகரன் (வயது 29) இந்த விபத்தின் போது அந்த இடத்திலேயே மரணமானார்.

மழைநேரம் கிழக்கு நோக்கி வந்த மினிபஸ் வழுக்கி வீதியின் தென் பக்கமாக மேற்கு நோக்கிய நிலையில் சரிந்து காணப்பட்டது.

மரணவிசாரணை நடைபெற்றவேளை மினி பஸ்ஸின் சாரதியோ, பயணிகளோ அங்கு சமூகமளித்திருக்கவில்லை.

இறந்தவரின் தந்தையார் திரு. செ. சரவணமுத்து சடலத்தை அடையாளம் காட்டினார்.

சாவகச்சேரி பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் ரி. சோமசுந்தரம் சடலத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்தார்.

விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ–75)

### விவசாய அறிவுப் போட்டி

மானிப்பாய், டிச. 29

மானிப்பாய்த் தொகுதிக்குட்பட்ட சண்டிலிப்பாய் – உடுவில் உதவி அரசாங்க அதிபர்கள் ஒருங்கிணைந்து மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே விவசாய அறிவுப் போட்டியொன்றினையும்—

மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வீட்டுத் தோட்டப் போட்டி யொன்றையும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடத்தவுள்ளனர்.

(உ–90)

### இராஜகோபுரம்

பண்டத்தரிப்பு, டிச. 29

மாதகல் நுணைசை முருகமூர்த்தி ஆலயத்திற்கு இராச கோபுரம் அமைக்கப்படுகின்றது.

சுமார் 7 லட்ச ரூபா செலவில் அமையும் 5 பீட இராச கோபுரம் அராலியூர் சிற்பாசாரியார் தலைமையில் நடைபெறுகின்றது.

(உ–120)

### கோரிக்கை

மண்டைதீவு, டிச. 29

மண்டைதீவுப் பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளிலும் ஏற்பட்டுள்ள ஆசிரிய தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடமாநில கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (உ–88)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

BITSMANS INSTITUTES
MANIPAY.
3 ஆவது ஆண்டு 11, 10, 9,8, 7ஆம் பிரிவு வகுப்புகளுக்குரிய சில பாடங்கள்.
எமது வழமையான Super Grade ஆசிரியர்களினால்
ஆரம்பம்: 5-1-87 திங். 3.30 p. m.
விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.
'எமது கல்வி நிலையத்தின் தரத்திற்கு கடந்தகால பெறுபேறுகள் சான்றாகும்.'

# உதயன்

29 . 12 1986 திங்கட்கிழமை

BITSMANS INSTITUTES
MANIPAY.
88 A/L கணித, விஞ்ஞான வகுப்புக்கள்
புதிய பகுதிகள்
பௌதிகம்; திரு சௌந்தி
இரசாயனம்: திரு, மகாதேவா
தூய கணிதம் )
பிரயோக கணிதம்) திரு கமலசிங்கம்
தாவரவியல்: திரு குகாதரன்
விலங்கியல்: திரு. ஈசன்
ஆரம்பம்: 5-1-1987 திங்கள்: 3.30

உண்ண ஒருநேர உணவின்றி, மாற்று உடையின்றி

# கிண்ணியாவில் தமிழ் அகதிகள் பட்டினியால் வாடும்நிலை!

யாழ்ப்பாணம், டிச 29

திருமலை தம்பலகமத்திலிருந்து கிண்ணியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்தவர்கள் அங்கே கட்டிய சந்தலைக் கழற்றுவதற்கு மாற்று உடையின்றி, ஒட்டிய வயிற்றுடன் - ஒருநேர உணவுமின்றி - பட்டினியால் பரிதவிக்கின்றார்கள்.

தம்பலகமம் பிரசைகள்குழுச் செயலாளர் ம. க. கிருஷ்ணகோபால் இவ்வாறு கூறினார்.

நேற்று நடைபெற்ற பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

தம்பலகமம் பிரசைகள்குழுத் தலைவர் கே. எஸ். தில்லைநாதன், பொருளாளர் பொ. சந்திரலிங்கம், திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. கு. கோணமலை, செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**தமிழ் மக்களின் இழப்புகள்**

திரு. கிருஷ்ணகோபால் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தம்பலகமத்திலிருந்து 6,200 பேர் அகதிகளாகக் கிண்ணியாவில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

இவர்களது உறவினர்களில் 63 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்; 54பேர் பூஸாவில் உள்ளனர். 60 பேர் காணாமல் போயுள்ளனர்.

தமது சொந்த வீடுகளை திருடர்களைப்போல் சென்று பார்க்கவேண்டிய சூழ்நிலையில் இவர்கள் கிண்ணியாவில் உள்ளனர்.

தம்பலகாமத்திலுள்ள 6000 ஏக்கர் நெற்செய்கைக் காணி பயிர்ச்செய்கையின்றிக் கிடக்கின்றது.

**படையினர் செயல்**

அரச அதிபர் மீளக்குடியேறப் பணித்ததின்பேரில் அங்கே மீண்டும் சென்றவர்களை இராணுவத்தினர் துரத்தியடித்துள்ளனர்.

செப்டம்பர் 28ஆம் திகதி 7 மணித்தியாலங்களாக பொம்பர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தின.

**பெருந்துன்பம்**

பத்திரிகைகளில் வருவதைப்போல் 50 மடங்கு துன்பத்தை அவர்கள் அங்கே அனுபவிக்கின்றனர்.

கடற்படை, இராணுவம், ஆகாயப்படை, பொலீஸ், ஊர்காவல் படை, சிங்களக் காடையர்கள் போன்றவர்களால் பெரும் துன்பம் அனுபவிக்கின்றனர்.

கிண்ணியாவில் கூட அவர்களுக்குப் பாதுகாப்பில்லை; ஊர்காவல் படையால் தந்தையரின் முன்னிலையிலேயே இளம் பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டு கொலைசெய்யப்படுகிறார்கள்.

அவர்கள் தமக்கென்று எவருமில்லை என்றவுணர்வினில் - நடப்பது நடக்கட்டும் என - மனம் மரத்துப்போனவர்களாக இருக்கின்றார்கள் என அவர் கூறினார். (உ - 5)

## கோட்டைக்கு அருகே வேட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், டிச 29

கடந்த சனியன்று யாழ்கோட்டைக்கு அண்மையில் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் கந்தையா செல்லத்துரை (34 வயது) என்றநபர் மரணமானார்.

காலஞ்சென்றவர் கொட்டடியில் உள்ள தமது வீட்டு முற்றத்தில் நின்றபொழுது திடீரெனத் தீர்க்கப்பட்ட துப்பாக்கிவேட்டு ஒன்று இவரது நெஞ்சைத் துளைத்ததாம்

இதனையடுத்து இவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டபின் 11 மணியளவில் மரணமானார். (உ-10)

அடகுநகை மீட்பதற்காக

## பலாலிக்குச் செல்வோருக்கு தகுந்த பாதுகாப்பு வேண்டும்

### சங்கம் விடுத்திருக்கும் கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், டிச 29

அடகு நகைகளை மீட்பதற்காக பலாலிக்குச் செல்லும் வாடிக்கையாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்க பாதுகாப்புப் படையினரின் அனுசரணையுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அடகு வைத்தோர் சங்கம் கடந்த வாரம் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மக்கள் வங்கி நிர்வாகம் தனது கடமையிலிருந்து தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையை நிவிர்த்தி செய்யும் நோக்குடன் மக்கள் வங்கியிடம் கீழ்க்காணும் கோரிக்கைகளை விடுவது எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

* உடனடியாகப் பலாலி முகாமில் உள்ள நகைகள் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும்.

* அத்துடன் கொழும்பில் இருந்தும் பணம் கட்டிய நகைகள், இனி மேல் பணம் கட்டப்படும் நகைகள், ரூபா 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட நகைகள், கீழ்ப்பட்ட நகைகள் என்ற பாகுபாடில்லாமலும், எந்தவித இடைநிறுத்தமும் இல்லாமலும் நகைகள் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும்.

* அடகு வைத்தோர் தங்கள் நகைகளை மீட்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் கொழும்பு கொண்டு சென்றதன் காரணமாக நகைகள் கொழும்பு கொண்டு சென்ற தினத்திலிருந்து அவர்களுக்கு மீளளிப்புச் செய்யும் தினம் வரை வங்கி கொடுத்த முற்பணத்துக்கு வட்டி அறவிடக்கூடாது.

* நகைகளை மீட்பதற்காக பணம் கட்டியவர்களுக்கு பணம் கட்டிய தினத்தில் இருந்து மீளளிப்புச் செய்யும் தினம் வரைக்கும் 30வீத வட்டி கொடுக்கப்பட வேண்டும். (உ-10)

## விளையாட்டரங்கு

கிரிக்கட் டெஸ்ட் தொடர்

### இங்கிலாந்திடம் ஆஸி அணி தோல்வி

மெல்பேர்ன், டிச. 30

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தொடரில் இங்கிலாந்து வெற்றியீட்டியது.

மெல்பேர்னில் நடைபெற்ற நான்காவதுகிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் பெருவெற்றியீட்டியதன் மூலம் டெஸ்ட் தொடரில் ஆஸியை வீழ்த்தியிருக்கிறது இங்கிலாந்து.

ஐந்து டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட இந்தத் தொடரில் நான்காவது போட்டியில் மூன்றாம் நாளான நேற்று ஆட்டம் முடிவடைவதற்கு 100 நிமிடங்கள் இருக்கையில் ஆஸிஅணி தோல்வியைத் தழுவிக் கொண்டது

பிறிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

பேர்த், அடிலயிட் ஆகிய இடங்களில் நடைபெற்ற இரண்டாம், மூன்றும் டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன.

85 வருட காலத்தினுள் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஒருடெஸ்ட் போட்டியில் மூன்றும் நாள் ஆட்டம்முடிவடைவதற்கு முன்னரே ஆஸி அணி இங்கிலாந்திடம் சோடைபோனது இதுவே முதல்தடவை.

இங்கிலாந்து அணி இன்னிங்ஸாலும் 14 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றது.

ஓட்ட விவரம்:-
ஆஸி: 141,194.
இங்கிலாந்து: 349 (உ)

### இலங்கை இந்திய டெஸ்ட்

நாக்பூர், டிச. 29

இந்திய இலங்கை அணிகளுக்கிடையே நாக்பூரில் நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் இரண்டாம்நாளான நேற்று ஆட்டத்தின் பெரும்பகுதி காலநிலை சீரின்மையால் விளையாட முடியாமற் போயிற்று

நேற்று இடைவேளைக்குச் சற்று முன்னர் வரை ஆட்டம் நடைபெற்றது. முதல் நாள் இலங்கை பெற்ற 204 ஓட்டங்களுக்குப் பதிலாக இந்திய அணி நேற்று ஒரு விக்கெட் இழப்புக்கு 54 ஓட்டங்களைப் பெற்றது. (உ)

### நாளை நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 29

மலையகப் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் வழங்குவதற்காக ஏற்கனவே நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதவர்கள் நாளை பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சின் கல்விச்சேவை ஆணைக்குழு நடத்தும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் திரு. க. சிவஞானம் கல்விச்சேவை ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டதனை அடுத்தே இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் வடபகுதி பரீட்சார்த்திகள் பலருக்கு குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரே கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. (உ10)

### பொதுக்கூட்டம்

வேலணை, டிச. 29

வேலணை தெங்கு,பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 12 வது வருடாந்தப் பொதுக் கூட்டமும் திட்டமிடல் அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமும் வேலணை துறையூர் ஐயனார் வித்தியாசாலை மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு திரு.செ. அரசரெத்தினம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ச வேலாயுதம்பிள்ளை, கூட்டுறவுப் பரிசோதகர் திரு. க. கனகசபாபதி, திரு. க. நடராஜா ஆகியோர் கலந்துகொள்வார்கள். (உ-167)

## தற்கொலை செய்த பெண் மனநோயாளியாம்

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ். ஆஸ்பத்திரி வளவில் தற்கொலை செய்து கொண்ட பெண்மணி மனநோயாளி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த பரராசா கிருஷ்ணவேணி (38 வயது) என்பவரே இப் பெண்.

திருமணமாகாத இப் பெண் ஒரு மனநோயாளி என்றும் கடந்த இரண்டு வருடங்களாக இவர் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர் என்றும் மரண விசாரணையில் தெரியவந்துள்ளது.

மரண விசாரணையை யாழ் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார்.

அப் பெண்ணின் சகோதரர் பரராசபேரின்ப பாலசுப்பிரமணிய ராசா சாட்சியம் அளித்தார்.

விசாரணை முடிவில் சடலம் உறவினர்களிடம் கொடுக்கப்பட்டது. (உ-10)

## இனப்பிரச்சினை

# முஸ்லிம்களின் அரசியல்தளம் பிரிக்கப்படாத விதத்தில் தீர்வு

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்து

அம்பாறை, டிச. 29

கிழக்கு இலங்கையில் முஸ்லிம்களின் அரசியல் தளம் பிரிக்கப்படாத வகையில் வரும் எந்தத் தீர்வுக்கும் முஸ்லிம் மக்கள் ஆதரவு தருவர்.

-- இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் சொன்னார்.

அக்கரைப்பற்று நூரியா மதிரஸா மண்டபத்தில் கட்சிப்பிரசாரக் கூட்டம் நேற்று நடந்தது.

அக் கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாப். அஷ்ரப் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;-

முஸ்லிம் இனம், மார்க்க அடிப்படையில் உருவான இனம். நாம் இஸ்லாமிய அடிப்படையில் இனம் காணப்பட வேண்டும். எம்மை மொழி அடிப்படையில் தமிழ்ப் போராளிகள் இனங்காணுகிறார்கள்.

முஸ்லிம் மாகாண சபையை நாம் முன்வைத்துள்ளோம். இது சம்பந்தமாக முஸ்லிம் எம்பிக்கள் வலியுறுத்தினார்களா? அவர்கள் எங்காவது இது பற்றிக் குரல் எழுப்பினார்களா? நாம் சந்தர்ப்பவாத இயக்கம் அல்ல. முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை தமிழ்ச் சகோதரர்கள் இன்னும் அங்கீகரிக்கவில்லை என்பது வேதனை தருகிறது. நாம் தனி இனமாக அங்கீகரிக்கப்படவேண்டும் -- இப்படி ஜனாப். அஷ்ரப் குறிப்பிட்டார்.

கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் கவிஞர் மருதூர்க்கவி பேசுகையில்-- போராளிக் குழுக்கள் சோஷலிசப் பேச்சு உண்மை என்றால் முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கையை அவர்கள் ஏற்க வேண்டும். அத்துடன் முஸ்லிம்இனத்தைத் தனித் தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும்.

தமிழர்கள் இஸ்லாமியத் தமிழர்என்று எம்மை அழைக்கின்றனர். இதை நாம் ஏற்கமுடியாது'' என்று சொன்னார்.

சட்டத்தரணி சேகு இஸ்ஸதீன் பேசுகையில் சொன்னதாவது!-

நிந்தாவூர் மன்றத்தில் சம்மாந்துறை எம். பி ஜனாப் அப்துல் மஜீத் அரசுக்கு எதிராக எழுப்பிய கண்டனக்குரல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை முளையிலே கிள்ளி எறிய மேற்கொள்ளப்பட்ட தந்திர நாடகமாகும்.

முஸ்லிம் காங்கிரஸ், அரசியல் கட்சியாகப் பிரகடனப் படுத்தப்பட்டது பேசாமடந்தைகளை பேச வைத்திருக்கின்றது.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும். இல்லையேல் இஸ்லாமிய இளைஞர்களும்ஆயுதம் ஏந்தும் நிலை தான் ஏற்படும்.

இப்படி சட்டத்தரணி இஸ்ஸதீன் சொன்னார்.

கூட்டத்துக்கு ஜனாப் ஏ.ஏ காரியப்பர் தலைமை வகித்தார். அக்கரைப்பற்று பிரசைகள் முழுத் தலைவர் ஜனாப். ஏ. அகமது லெவ்வை, நவசம சமாஜ கட்சியின் அம்பாறைஅமைப்பாளர் ஏ. எம். எம். ஜவாத் ஆகியோரும் பேசினர். (உ-எ-14)

### ஆலோசனைக் கூட்டம்

மண்டைதீவு, டிச.29

மண்டைதீவு பொது சன நூல் நிலையத்தின் ஆலோசனைக் குழு கூட்டம் நிர்வாக அதிகாரி திரு. டி. பூபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இப்பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (இ-88)

## மட்டக்களப்பு அரச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நிற்கும் வள்ளத்தில் இருப்பவரைக்கூட்டி வரும்படி பணித்தனர்.

அந்த மீனவர் சென்று இனந்தெரியாத நபர்களினால் கைவிடப்பட்ட வள்ளத்தில் நின்றவரை அழைத்து வந்து ஆயுதப் படையினரிடம் ஒப்படைத்தார்.

''நான் மட்டக்களப்பு பதில் அரச அதிபர்''— என்று திரு. செல்வரத்தினம் படையினரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

படையினர் பின்னர் திரு.செல்வரத்தினத்தை மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்றனர். அங்கு முறைப்பாடு பதியப்பட்ட பின்னர் திரு. செல்வரத்தினம் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். (அ-உ-எ-)

## மர்மமான முறையில் மரணம்

மன்னார், டிச. 29

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட இளைஞனின் சடலம் புளியமரத்தில் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது

நேற்று மன்னார் ஆண்டாங்குளத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

சிவலிங்கம் ராஜசேகரம் (27வயது) என்ற இளைஞரே இவ்வாறு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

இவரது உறவினர்கள் சடலத்தை மரத்திலிருந்து இறக்கிப் பார்த்த பொழுது சடலத்தில் பலத்த அடிகாயங்கள் காணப்பட்டன. (உ-10)

## பிக்பொக்கட்

யாழ்ப்பாணம், டிச 29

வவுனியா ரயில் நிலையத்தில் கொழும்பு செல்வதற்காக தரித்து நின்ற பிரயாணி ஒருவரிடம் 12 ஆயிரம் ரூபா பிக்பொக்கட் அடிக்கப்பட்டுள்ளது

மட்டக்களப்பைச் சேர்ந்த நடராசா என்பவரே இத் தொகையை பறிகொடுத்தவராவார். (உ-10)

## கலைஞர் கருணாநிதிக்கு வெள்ளிவரை விளக்க மறியல்

சென்னை, டிச. 29

தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி ஜனவரி 2ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

திரு. கருணாநிதியும் ஐந்து பேரும் கடந்த வெள்ளிக்கிழமைசைதாப்பேட்டை நீதிவான் பி. முத்துசுவாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அரசியல் சாசனத்தை எரித்ததற்காக 14 நாள் விளக்கமறியலில் இருந்த இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

தனக்கு எதிராக சுமத்தப்பட்ட எல்லாக் குற்றச் சாட்டுக்களையும் மறுத்து திரு. கருணாநிதி எழுத்து மூலமான பதிலை நீதிவான் முன் சமர்ப்பித்தார்.

சுற்றவாளி என்று கூறியதைத் தொடர்ந்து, ஜனவரி 2 வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து திரு. கருணாநிதியும் மற்றவர்களும் மத்திய சிறைக்குக் கொண்டு போகப்பட்டனர்.

பிணையில் விடுவிக்கக் கோரும் விண்ணப்பம் எதையும் திரு கருணாநிதியும் ஏனையவர்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. (அ-எ)

## அக்கினோவிற்கு கௌரவம்

வாஷிங்டன், டிச. 28

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி. கொரஸின் அக்கினோவை 1986 ஆம் ஆண்டின் தலைசிறந்த பெண்மணியாக அமெரிக்க வாராந்தச் சஞ்சிகை 'டைம்' தெரிவு செய்துள்ளது.

கடந்த 60 ஆண்டு காலத்தில் இந்த கௌரவத்தைப் பெறும் மூன்றாவது பெண்மணி அக்கினோவாவார். (ஜ)

## ரெலோ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டனும் எமக்கு தொடர்பு உண்டு தி மு க. வுடன் விசேட தொடர்பு எதுவும் கிடையாது.

'துன்புறுத்தல் மத்தியில் இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் 'மனநிலையில் ரெலோ இல்லை.

இப்படி திரு. செல்வம் சொன்னார். (உ-எ)

## இரகசியப்...

(1 .ம் பக்கத்தொடர்ச்சி)

வெள்ளி முதல் கட்டாய விடுமுறையில் செல்லும்படி திரு. மோஹன் தாஸுக்கு தமிழ் நாடு அரசு உத்தரவிட்டது.

● நவம்பர் 8 ஆம் திகதி 'ஒப்பரேஷன் டைகர்', சோதனையை நடத்தியது; ஆயுதங்களைக் கைப்பற்றியது.

● நவம்பர் 21 இல் போராளிகளின் தகவல் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றியது;

● ''புலிகள் தலைவர் பிரபாகரன் கள்ளத்தனமாக தமிழ்நாடு வந்தவர்; வந்தவழியே அவர் திரும்பிப் போகலாம்'' — என்று பெயரைக் குறிப்பிடாது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழுக்கு பேட்டி அளித்தது.

● அண்மையில் சிங்கப்பூருக்குப் போய்த் திரும்பியது-

மேற் கூறப்பட்ட விஷயங்கள் தொடர்பாகவே திரு.மோஹன்தாஸ் கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருக்கிறார் என்று சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ-எ)

## பேச்சுக்கள் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் 50 ரெலோ போராளிகள் ஆரம்பித்துள்ள சாகும்வரை உண்ணாவிரதம் தொடர்கிறது.

இதனிடையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கப் போராளிகள் பெருமளவில் கைது செய்யப்பட்டனர் என்ற செய்தியில் உண்மை இல்லை என்று இரகசியப் பொலீஸ் ஆணையாளர் மோஹன் தாஸ் கடந்த வாரம் மறுத்தார்.

தமிழ்ப் போராளிக் குழுக்கள் மீது அமெரிக்கா கூர்த்தனமான நடவடிக்கைகளை பொலீஸார் மேற்கொள்கின்றனர் என்பதையும் திரு. மோஹன்தாஸ் மறுத்திருந்தார். (உ-ஐ-எ)

## சிதம்பரம் .,

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வில் இருந்து இலங்கை அரசு பின்வாங்கியது இந்தியாவைத் திகைப்படையச் செய்துள்ளது.

எந்தத் தீர்விலும் முஸ்லிம்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றுதான் முஸ்லிம் எம். பிக்கள் இணை அமைச்சர்களிடம் தெரிவித்திருந்தனர்.

அம்பாறைத் தொகுதியைத் தவிர்ந்த கிழக்கு மாகாணசபை என்ற யோசனையை சில முக்கிய அமைச்சர்கள் தான் இலங்கையில் பத்திரிகைகளுக்கு வெளியிட்டனர்.

முஸ்லிம்கள் மத்தியில் இருந்து எதிர்ப்பை உருவாக்கலே இதன் நோக்கமாகும்.

இப்படி திரு. ரெட்டி எழுதியிருக்கிறார். (அ-ஐ-எ)

## பருத்தித்துறையில் ஷெல் தாக்குதல்

வல்வெட்டித்துறை, டிச. 29

நேற்றுக்காலை 9.00 மணியளவில் பருத்தித்துறை முகாமில் இருந்து திக்கம், பொலிகண்டி போன்ற இடங்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-16)

## அரசியல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேன். அரசியல் சாசனத்துக்கு அவமதிப்புச் செய்வதல்ல இதன் நோக்கம்.

இந்தித்திணிப்பால்இந்தியாவின் ஒற்றுமைக்கு ஏற்படவுள்ள ஆபத்துக் குறித்து அனைவரின் கவனத்தை ஈர்ப்பதே எனது செயலின் நோக்கம்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டபடியால் தான் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை ஆதரித்தேன்.

இப்படி திரு.கருணாநிதி தனது எழுத்து மூல வாக்கு மூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

தமிழில் எழுதப்பட்ட வாக்குமூலத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது. (அ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 29 - 12 - 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60, N 86 தொலைபேசி 24805, 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org